## இயல்-1 துணைப்பாடம் உரைநடையின் அணிநலன்கள்

### முன்னுரை

எழில் முதல்வன் எழுதிய புதிய உரைநடை நூலின் உரைநடையின் அணிநலன்கள் என்ற கட்டுரையின் சுருக்கம் இது. சங்கத்தமிழனும் இணையத் தமிழனும் சந்திக்கிறார்கள் இங்கு.

### சங்கத்தமிழரின் எதிர்பார்ப்பு

அகம், புறம் பாடவேண்டும். அகத்துள் உள்ளுறை, இறைச்சி இருக்கிறதா? தொல்காப்பியர் கூறும் உரைநடை இருக்கிறதா? உணர்ச்சிகளைக் காட்ட உவமை இருக்கிறதா? அஃறிணைப் பொருள்கள் சொல்லுந போலவும் கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும் - உத்திகள் உளதா? மோனையும் எதுகையும் கொண்டு உரைநடை அமைகிறதா? உச்ச நிலை பற்றித் தெரியுமா? என்று கேட்கிறார் சங்கப்புலவர்.

### இணையத் தமிழனின் மறுமொழி

தமிழ் இன்று கணினித்தமிழ் ஆகிவிட்டது தமிழ் இலக்கியம் அற இலக்கியங்களாகி, காப்பியங்களாகி, சிற்றிலக்கியங்களாகி, சந்தக் கவிதைகளாகி, புதுக்கவிதைகள், நவீன கவிதைகளில் வந்து நிற்கிறது. உரைநடையோ சிறுகதை, கட்டுரை, புதினம் எனப் பல வடிவில் உள்ளது

திருப்பரங்குன்ற அழகைப் பார்க்க இயற்கை பதித்த கண்ணாடிகள் இரு கண்மாய்கள் - நா.பார்த்தசாரதி கூறும் உவமை

முகத்தில் வியர்வை முத்துகள் - உருவகம்.

களம்புகத் துடித்து நின்ற உனக்கு வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது - அறிஞர் அண்ணா.

புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை - இணை ஒப்பு வ.ராமசாமி.

மரங்கள் கூப்பிடும், விருந்து வைக்கும் - இலக்கணை - திரு.வி.க.

பயம் என்கிற ஒன்றிற்குத் தவிர வேறு எதற்குப் பயப்பட வேண்டும்?- முரண்படு

மெய்ம்மை

கலப்பில்லாத பொய் - சொல் முரண்

குடிசைகள் ஒருபக்கம், கோபுரங்கள் மறுபக்கம் - ப. ஜீவானந்தம் - எதிரிணை இசைவு,

முடிவுரை:

எதுகையும் மோனையும் நிறைந்த படைப்புகள் எங்கள் மடிக்கணினிகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியம் நம் பாட்டனார் தோப்பு. இடைக்கால இலக்கியம் நம் தந்தையார் தோட்டம், இக்கால இலக்கியம் நம் பூங்கா. கன்னித் தமிழ் கணினித் தமிழாய் வளரட்டும்.